


**26. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி, ஏற்றுமதி, மற்றும் நட்பு நாடுகளுடனான அரசியல் ஒத்துழைப்பு உள்ளிட்டவற்றில் இந்தியா புதிய உச்சத்தை எட்டி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளாா்.

2. விவசாயத்தை பாதுகாக்க மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளாா்.

3. எல்நினோ பாதிப்பை தவிா்க்க அதிக மகசூல் தரும் குறுகிய கால பயிா்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு. வினோத் தொிவித்துள்ளாா்.

4. மேகதாது அணை விவகாரம் தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு.நிா்மல் குமாா் குறிப்பிட்டுள்ளாா்..

5. இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 3ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று நடைபெறுகிறது.

**************

பிரதமர்

பாதுகாப்பு, தளவாட உற்பத்தி, ஏற்றுமதி, மற்றும் நட்பு நாடுகளுடனான அரசியல் ஒத்துழைப்பு உள்ளிட்டவற்றில் இந்தியா புதிய உயரங்களை எட்டி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தொிவித்துள்ளாா்.

அகில இந்திய வானொலியில் மனதின் குரல் நிகழ்ச்சியில் 136-வது முறையாக இன்று உரையாற்றிய அவர் காா்கில் வெற்றி தினத்தை ஒட்டி ராணுவ வீரர்களை நாடு நினைவு கூறுவதாக கூறினாா்.

தாய் நாட்டின் பாதுகாப்பிற்காக வீரர்களின் தியாகம் மற்றும் துணிச்சல், திறன்மிக்க பாதுகாப்பான சுய சாா்பு இந்தியா முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்துவதாக தொிவித்தாா்.

இந்நாளை ஒட்டி "ஒரே பயணம், ஒரே தேசம், ஒரே வணக்கம் " என்பதை வலியுறுத்தும் வகையில் கடந்த 14ஆம் தேதி புதுதில்லி தேசிய போர் நினைவிடத்தில் தொடங்கப்பட்ட சிறப்பு இருசக்கர பேரணி லடாக் ட்ராஸில் உள்ள கார்கில் போர் நினைவிடத்தை சென்றடையும் என்றார்.

நாடு தனது தொழில்நுட்ப திறன்களை தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக கூறிய பிரதமர் இந்திய கடற்படையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ். மகேந்திரகிரி நவீன போர் கப்பல் அண்மையில் இணைக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

சுய சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் இந்த கப்பல் கட்டமைப்பிற்கு தேவையான 75 சதவிகிதத்திற்கும் அதிகமான பொருட்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக தெரிவித்த பிரதமர், இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் "பினாகா", தொலைதூர ராக்கெட் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதாக கூறினார்.

"குஷா" ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதற்கு விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் விடா முயற்சியை பாராட்டிய பிரதமர், அண்மையில் தாம் மேற்கொண்ட இந்தோனேசிய பயணத்தின் போது பிரம்மோஸ் மற்றும் அஸ்திரா ஏவுகணைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் மீது உலக அளவில் நம்பிக்கை அதிகரித்து வருவதாக மகிழ்ச்சி வெளியிட்டார்.

நாட்டின் விண்வெளி துறையில் தனியார் பங்களிப்பிற்கு வாய்ப்பளித்ததன் வாயிலாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் நிறுவனத்தின் முதல் ராக்கெட்டான விக்ரம் 1 வெற்றிகரமாக ஏவப்பட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர் இதன்மூலம் இந்திய இளைஞர்களின் திறன், ஆர்வம் மற்றும் பொறுமை ஆகியவை வெளிப்பட்டதாக கூறினார்.

"மழை நீரை சேகரிப்போம்" இயக்கத்தின் கீழ் கடந்த 4ஆம் தேதிமுதல் மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், பழைய நீர்நிலைகளை சீரமைத்தல், மரம் நடுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குளம், கிணறு, உள்ளிட்ட நீர்நிலைகளை பராமரிக்கும் பொறுப்பை தாமாக முன்வந்து

ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிரதமர் ஒவ்வொரு துளி நீரும் சேமிக்கப்பட வேண்டும் என்றாா்.

கிளாஸ்கோவில் தொடங்கியுள்ள காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் இந்திய வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் விரும்புவதாக தொிவித்த பிரதமர் ஜப்பான் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து முதன்முறையாக பட்டம் வென்றதற்கு நாடு பெருமை அடைவதாக கூறினாா்.

இந்திய மகளிா் கிரிக்கெட் அணி லண்டன் லாட்ஸ் மைதானத்தில் தனது முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றதற்கு பாராட்டு தொிவித்த பிரதமர் இதன்மூலம் பெண் சக்தி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறினாா்.

கடந்த 1983 ஆம் ஆண்டு இந்தியா தனது முதல் கிரிக்கெட் உலக கோப்பையை கைப்பற்றியதையும் பிரதமர் நினைவு கூர்ந்தாா்.

அறிவியல் ஒலிம்பியாட் போட்டிகளில் இந்திய மாணாக்கா் தங்க பதக்கங்களை வென்றது நாட்டின் இளைஞர் சக்தியை வெளிப்படுத்துவதாக கூறினாா்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் மூலம் நாட்டு மக்கள் இயற்கையை பாதுகாப்பதில் தங்களது கடமையை நிறைவேற்றி வருவது மகிழ்ச்சி அளிப்பதாக கூறினாா்.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் பல ஆண்டுகளாக இயற்கைக்கு தீங்கு விளைவிப்பதாக கூறிய பிரதமர் பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினாா்.

விநாயகர் சதுர்த்தியின்போது "பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ்"-க்கு பதிலாக களிமண்ணால் செய்யப்பட்ட சிலைகளை உருவாக்க வேண்டும் என்ற தமது வேண்டுகோள் கடைபிடிக்கப்படுவது மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டாா்.

தேசிய கைத்தறி தினம் அடுத்த மாதம் 7 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், கைத்தறி தொழிலை ஊக்குவிப்பதன் மூலம் உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்திற்கு வலுசேர்க்குமாறு கேட்டுக்கொண்டாா்.

காதி பொருட்கள் விற்பனை கடந்த 12 ஆண்டுகளில் 6 மடங்கு உயர்ந்து 8 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக பெருமிதம் தொ◌ிவித்த பிரதமர், பொதுமக்கள் பண்டிகை காலங்களில் காதி, கைத்தறி, கைவினை பொருட்களை வாங்கி உள்ளூர் பொருட்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொண்டா◌ா◌்.

நமது பாரம்பா◌ிய இசையை பிரபலப்படுத்தும் வகையில் உள்ளூர் இசைக்கருவிகள் குறித்த தகவல்களை மக்கள் சமூக ஊடகங்களில் பகிருமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டா◌ா◌்.

முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் நினைவு நாள் நாளை கடைபிடிக்கப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர் கனவு காண வேண்டும் என்று டாக்டர் கலாம் அறிவுறுத்தியதை நினைவு கூர்ந்தா◌ா◌்.

இவ்வாரம் கொண்டாடப்பட உள்ள குருப்பூர்ணிமா நமது வழிகாட்டிகளுக்கு நன்றி தொ◌ிவிக்கும் திருநாளாக விளங்குவதாக பிரதமர் குறிப்பிட்டா◌ா◌்.

சுதந்திர தினத்தன்று ஒட்டுமொத்த தேசத்தையும் உணர்வுபூர்வமாக ஒன்றிணைக்கும் வகையில் ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ண கொடி ஏற்றும் இயக்கம் கடந்த ஆண்டுகளை போலவே உற்சாகத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிரதமர் தமது சுதந்திர தின உரையில் இடம்பெற வேண்டிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பொதுமக்கள் mygov இணையதளத்தில் பகி◌ா◌்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டா◌ா◌்.

**************

கார்கில்

கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்ற 27வது விஜய் திவஸ் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோ◌ா◌் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் ராணுவ வீரர்களின் இணையற்ற வீரம், தளராத உறுதி மற்றும் தேசப்பற்று ஆகியவை ஆயுத படைகளின் மிகச்சிறந்த மரபுகளை பறைசாற்றுவதாக கூறினா◌ா◌்.

குடியரசு துணை தலைவர், காா்கில் வீரர்களின் தியாகத்திற்கு நாடு என்றென்றும் நன்றியுடன் இருக்கும் என்று கூறியுள்ளாா்.

பிரதமர் வெளியிட்ட செய்தியில் நம் ராணுவத்தினரின் தேச பக்தியும், கடமை உணர்வும் இளம் தலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளாா்.

லடாக் ட்ராஸில் அமைந்துள்ள காா்கில் போா் நினைவு சின்னத்தில் அஞ்சலி செலுத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் மறைமுக போா்கள் ஊடுருவல்கள் உள்ளிட்ட எவ்வித சவாலையும் எதிா்கொள்ளும் வகையில் இந்திய பாதுகாப்பு படை தயாா்நிலையில் உள்ளதாக கூறினாா்.

நாட்டின் வீரமிக்க படை வீரர்களின் தேசபற்றும், உறுதியும் இருக்கும் வரை நம் நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதாக தொிவித்த அவர், உலக தரம் வாய்ந்த ஆயுதங்கள் மற்றும் பயிற்சியுடன் பாதுகாப்புத்துறை நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தாா்.

மத்திய அரசு ராணுவ வீரர்களின் நலனிற்கு அதி முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டாா்.

1999-ம் ஆண்டு பாகிஸ்தானிற்கு எதிரான போரில், இந்தியா வெற்றி பெற்றதை கொண்டாடும் வகையில் விஜய் திவஸ் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி தமிழகத்தில் பல்வேபறு மாவட்டங்களில் காா்கில் ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தூத்துக்குடியில் உள்ள ராணுவ மருத்துவ மையத்தில் காா்கில் போரில் உயிா்நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இப்போரில் பங்கேற்ற கர்னல் சுகுமாா், ராணுவ மருத்துவ மையத்தின் பொறுப்பு அலுவலர் லெப்டினன் பிரச்சன்னம் பிள்ளை உள்ளிட்டோா் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

காாில் வெற்றி குறித்த அஞ்சல் கண்காட்சி நடைபெற்றது.

**************

எல்.முருகன்

விவசாய துறையை பாதுகாக்கும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்,முருகன் தொிவித்துள்ளாா்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் சர்வதேச கூட்டுறவு தின நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், டிஜிட்டல் பண பரிவர்த்தனை மூலம் பிரதமாின் வேளாண் நிதி உதவி திட்டத்தின் பலன்கள் விவசாயிகளை நேரடியாக சென்றடைவதாக கூறினாா்.

வாய்ஸ்

2047-ஆம் ஆண்டிற்குள் நாடு வல்லரசாக உருவெடுக்க அனைத்து தரப்பினரும் தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டாா்.

*************

வினோத்

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணிகள் 20 நாட்களுக்குள் நிறைவடையும் என்று மாநில வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.வினோத் தொிவித்துள்ளாா்.

செட்டிமண்டபத்தில் ஆகாயதாமரை அகற்றும் பணிகளை இன்று தொடங்கிவைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எல்நினோ பாதிப்பை தவிா்க்க அதிக மகசூல் தரும் குறுகிய காலபயிா்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றாா்.

*************

நிா்மல் குமாா்

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் விவசாயிகளிடம் கருத்து கேட்டு வருவதாகவும், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.நிா்மல் குமாா் தொிவித்துள்ளாா்.

திருச்சி சட்டக்கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீண்டகாலமாக சிறையில் உள்ள இஸ்லாமிய கைதிகளின் விடுதலை தொடர்பாக மத்திய அரசின் ஒப்புதலுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினாா்.

*************

பட்டாசு விபத்து

சிவகாசி அருகே சட்டவிரோதமாக பட்டாசு தயாாித்த குடோனில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த ஒருவர் சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது விருதுநகர் செய்தியாளர் தொாிவிக்கிறாா்.

**************

இருவாி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடும்ப அட்டையில் உள்ள உறுப்பினர்களின் கைரேகைகளை புதுப்பித்துக்கொள்ளாத 30 ஆயிரத்து 489 பேர் நியாயவிலைக்கடைகளுக்கு சென்று இப்பணிகளை மேற்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி சினேகா கேட்டுக்கொண்டுள்ளாா்.

**************

தூத்துக்குடி

தூத்துக்குடி பனிமயமாதா பேராலயத்தின் 444ஆவது திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

10 நாட்களில் நடைபெறும் இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியான மாதா சப்பர பவனி வரும் 5 ஆம் தேதி நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தொாிவிக்கிறாா்.

**************

கிரிக்கெட்

இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 3ஆவது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று மாலை நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்தியா ஏற்கனவே 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது